நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

## வேளாண் கூடுதல் இயக்குநர் ஆய்வு

First Published : 24 Oct 2010 10:28:04 AM IST

காரியாபட்டி, அக். 23: காரியாபட்டி வட்டாரத்தில் சீகனேந்தல், முஷ்டக்குறிச்சி, பாப்பனம் ஆகிய கிராமங்களில் ராஜராஜன் - 1000 நெல் நடவு முறை, மண்புழு உரக் கூடம், அக்ரி கிளினிக் சிறுமண் ஆய்வுக்கூடம், விதைப் பண்ணை திடல் உள்ளிட்டவற்றை வேளாண் ஆணையரக கூடுதல் இயக்குநர் முருகன் பார்வையிட்டு ஆய்வு செய்தார். மாவட்ட வேளாண் இணை இயக்குநர் பாண்டியராசு, வேளாண் துணை இயக்குநர் கனகராஜன், மாவட்ட நீர்வடிப் பகுதி மேலாண்மை முகமை துணை இயக்குநர் பிச்சை ஆகியோர் உடனிருந்தனர்.

## அக். 28-ல் விவசாயிகள் குறைதீர் கூட்டம்

First Published : 24 Oct 2010 12:04:06 PM IST

பெரம்பலூர், அக். 23: பெரம்பலூர் மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் அக். 28 ஆம் தேதி நடைபெறுகிறது என்றார் மாவட்ட ஆட்சியர் (பொறுப்பு) சு. பழனிசாமி.

இதுகுறித்து அவர் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

பெரம்பலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்ட அரங்கில் மாவட்ட ஆட்சியர் தலைமையில் அக். 28 ஆம் தேதி காலை 11 மணிக்கு மாவட்ட விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் நடைபெறுகிறது.

இந்தக் கூட்டத்தில் வேளாண்மை தொடர்பான நீர்ப் பாசனம், வேளாண்மைக்கான கடன் உதவித் தொகைகள், இடுபொருள்கள், இயந்திரங்கள் மற்றும் விவசாயிகள் மேம்பாட்டுக்கான நலத் திட்டங்கள் குறித்து விவாதிக்கப்பட உள்ளது.

எனவே, இந்தக் கூட்டத்தில் விவசாயிகள் மற்றும் விவசாயச் சங்கப் பிரதிநிகள் பங்கேற்று, தங்களது குறைகளைத் தெரிவித்து பயன்பெறலாம் என்றார் அவர்.

**மண் ஆய்வு குறித்த விழிப்புணர்வு பேரணி**

First Published : 24 Oct 2010 12:03:13 PM IST

பெரம்பலூர், அக். 23: பெரம்பலூர் மாவட்டம், ஆலத்தூர் ஊராட்சி ஒன்றியத்துக்கு உள்பட்ட புதுக்குறிச்சி கிராமத்தில், ஹேன்ஸ் ரோவர் வேளாண் அறிவியல் மையம் சார்பில், மண் ஆய்வு குறித்த விழிப்புணர்வு பேரணி அண்மையில் நடைபெற்றது.

மண்ணியியல் தொழில்நுட்ப நிபுணர் இரா. பிரிஸ்கா பிளேவியா தலைமை வகித்து, பேரணியை தொடக்கிவைத்தார்.

அரசு தொடக்கப் பள்ளி வளாகத்தில் தொடங்கிய பேரணி, அந்த கிராமத்தின் பிரதான சாலைகள் வழியே சென்று, மீண்டும் பள்ளி வளாகத்தில் நிறைவடைந்தது.

இதில் பங்கேற்ற மாணவ, மாணவிகள் மண் வளம் பாதுகாப்பது குறித்து கோஷங்கள் எழுப்பினர்.

இதில் மனையியல் நிபுணர் விஜயலட்சுமி, கால்நடை மருத்துவர் சிவக்குமார், புதுக்குறிச்சி அரசு மேல்நிலைப் பள்ளியைச் சேர்ந்த ஆசிரியர்கள் மற்றும் மாணவ, மாணவிகள் கலந்து கொண்டனர்.

தினமலர்

**தீவனப் பயிர் விதை கரணை விவசாயிகளுக்கு அழைப்பு**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 25,2010,00:14 IST

விருத்தாசலம் : விருத்தாசலம் வேளாண்மை அறிவியல் நிலையத்தில் தீவனப் பயிர் விதை கரணை விற்பனைக்கு தயாராக உள்ளது. இதுகுறித்து விருத்தாசலம் வேளாண்மை அறிவியல் நிலைய தலைவர் சுப்ரமணியன் விடுத் துள்ள செய்திக்குறிப்பு: விருத்தாசலம் வேளாண்மை அறிவியல் நிலையத்தில் தீவனப் பயிர் கோ 4 கம்பு நேப்பியர் புல் விதை கரணைகள் விற்பனைக்குத் தயாராக உள்ளது. 1,000 கரணைகள் விலை 450 ரூபாய்க்கு கிடைக்கும். தேவைப்படும் விவசாயிகள் விருத் தாசலம் வேளாண்மை அறிவியல் நிலையத்திற்கு நேரில் வந்து வாங்கி பயனடையலாம். இவ்வாறு செய்திக்குறிப்பில் கூறப்பட் டுள்ளது.

**விவசாயிகளுக்கு தடையின்றி தண்ணீர் கிடைக்க கண்காணிப்பு குழு**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 25,2010,00:07 IST

சிதம்பரம் : விவசாயிகளுக்கு தண்ணீர் தடையின்றி கிடைத்திட கண்காணிப்புக் குழு அமைக்கப்பட்டுள்ளதாக சிதம்பரம் பொதுப்பணித் துறை செயற் பொறியாளர் செல்வராஜ் தெரிவித்துள்ளார். காவிரி கடை மடை பகுதி பாசனத் திற்கு தண்ணீர் விடுவது தொடர்பாக விவசாயிகள், வேளாண் அதிகாரிகள் ஆலோசனைக் கூட்டம் சிதம்பரம் பொதுப்பணித் துறை செயற் பொறியாளர் செல்வராஜ் தலைமையில் நடந்தது.

கூட்ட முடிவில் அவர் நிருபர்களிடம் கூறியதாவது: கொள்ளிடம் வடிநில கோட்டத் தில் கடலூர் மாவட்டத்தில் 1.38 லட்சம் ஏக்கர், நாகை மாவட்டத்தில் ஒரு பகுதியில் 22 ஆயிரம் ஏக்கர், தஞ்சையில் ஒரு பகுதியில் 1,580 ஏக்கர் பாசனம் பெறுகிறது. பருவ மழை தொடங்க தாமதம் ஏற்படுவதால் நீரின் பயன்பாடு மற்றும் அதன் மேலாண்மை குறித்து விவசாய சங்க பிரதிநிதிகளுடன் ஆலோசனைக் கூட்டம் நடத்தப்பட்டது. அதில் தங்கு தடையின்றி விவசாயிகளுக்கு தண்ணீர் கிடைக்க கண்காணிப்பு குழு அமைக்க முடிவெடுக்கப் பட்டுள்ளது.

வடவாற்றில் 1,172கன அடி, கொள்ளிடம் வடக்கு ராஜன் வாய்க் காலில் 173, சேத்தியாத்தோப்பு அணைக்கட்டு பாசனத்திற்கு 270, வடவாறு நேரடி பாசனத்திற்கு 300 கன அடியும் வழங்கப்படுகிறது. இதன் மூலம் கடைமடை வரை தண் ணீர் செல்வது உறுதிப்படுத்தப்பட் டுள்ளது. சேத்தியாத்தோப்பு அணைக்கட்டு பாசனத்திற்காக வெள்ளாறு ராஜன் வாய்க்கால் மூலம் 22 ஆயிரம் ஏக்கர் பரப்பிற்கு தண்ணீர் வழங்கப்படுகிறது. கடலூர் மாவட்ட காவிரி டெல்டா பகுதியில் மொத்த நெல் சாகுபடி பரப்பான ஒரு லட்சத்து 38 ஆயிரம் ஏக்கருக்கு 93 ஆயிரத்து 520 ஏக்கரில் நடவு பணிகள் முடிந் துள்ளது. "ராஜராஜன் 1000' சாகுபடி காவிரி டெல்டா பகுதி இலக்கான 45 ஆயிரம் ஏக்கருக்கு 35 ஆயிரத்து 115 ஏக்கரில் நடவு பணிகள் முடிந் துள்ளது. மீதமுள்ள பரப்பிற்கு நாற் றங்கால் தயாராக உள்ளது. ஒவ்வொரு வாரமும் பாசன பிரிவு அலுவலகங்களில் நீர் பகிர்மானம் குறித்து சம்மந்தப்பட்ட விவசாயிகளுடன் ஆலோசனை நடத்தப்படுகிறது.

விவசாயிகளுடன் ஆலோசனை நடத்தியதன் பேரில் செயற்பொறியாளர்கள் கீழணை மற்றும் சிதம்பரம் வேளாண்மை உதவி இயக்குனர்கள், சிதம்பரம், புவனகிரி விவசாய பிரதிநிதிகள், காட்டுமன்னார் கோவில் கண்ணன், இளங்கீரன், ரங்கநாயகி, முத்துக்குமாரசாமி, ரவீந் திரன், கண்ணன் ஆகியோர் அடங் கிய கண்காணிப்பு குழு அமைக்கப்பட்டுள்ளது.

இக்குழுவினர் நீர் வினியோகத்தை கண்காணித்து வருவார்கள். பாசனத்தார்களே முன் வந்து பயிர் தேவைக்கு ஏற்ப நீர் பாய்ச்சும் முறையை கையாள முடிவெடுத்துள் ளனர். அதன்படி தற்போது கைவசம் கிடைக்கும் நீரை அனைத்து பகுதிகளுக்கும் கடைமடை உட்பட பகிர்மானம் செய்து வழங்கப்படுகிறது. இவ்வாறு செயற்பொறியாளர் செல்வராஜ் தெரிவித்தார்.

**கால்நடை பாதுகாப்பு திட்ட முகாம்**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 25,2010,00:04 IST

விருத்தாசலம் : விருத்தாசலம் அடுத்த அருகேரி கிராமத்தில் வாழ்ந்து காட்டுவோம் மற்றும் கால்நடை பராமரிப்பு துறை சார்பில் கால்நடை பாதுகாப்புத் திட்ட முகாம் நடந்தது. ஊராட்சி தலைவர் கணபதி தலைமை தாங்கினார். உதவி திட்ட மேலாளர் ஜீவியராஜ், சிட்டிபாபு முன் னிலை வகித்தனர். அணி தலைவர் முத்துவேல் வரவேற்றார். மாவட்ட திட்ட மேலா ளர் நித்தியாநந்தம் முகாமை தொடங்கி வைத்தார். டாக்டர் வேங்கடலட்சுமி தலைமையிலான மருத்துவக் குழுவினர் கால்நடைகளுக்கு சிகிச்சை அளித்தனர். முகாமில் 300 மாடு, 100 ஆடுகளுக்கு தடுப்பு மருந்து, ஊட்டச்சத்து மருந்து போடப்பட்டது. டாக்டர் கமலநாதன், ஆய்வாளர்கள் திலீபன், திட்ட ஒருங்கிணைப் பாளர்கள் கணேசமூர்த்தி பங்கேற்றனர்.

**மஞ்சள் கிழங்கில் அழுகல் நோய் தாக்குதல் கட்டுப்படுத்த ஆலோசனை**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 25,2010,02:09 IST

நாமக்கல்: "மஞ்சள் கிழங்கில் அழுகல் நோய் தாக்குதல் பரவலாக காணப்படுகிறது. தடுப்பு முறைகளை கையாண்டால் நோயை கட்டுப்படுத்தலாம்' என, நாமக்கல் உழவர் பயிற்சி நிலைய வேளாண் துணை இயக்குனர் நடராஜன் தெரிவித்துள்ளார். அவர் வெளியிட்டுள்ள அறிக்கை: மஞ்சள் பயிரில் பல பூசான நோய்கள் தாக்கி பெரும் சேதத்தை விளைவிக்கின்றன. கிழங்கு அழுகல் நோய் மஞ்சள் சாகுபடி செய்யும் எல்லாப்பகுதியிலும் இழைப்பை ஏற்படுத்துகிறது.இந்நோய் தாக்குதலின் அறிகுறியாக, பாதிக்கப்பட்டு பயிரின் இலை ஓரங்கள் முதலில் சிறிது சிறிதாக காய்ந்து பின் முழுமையாக காய்ந்துவிடும். தண்டுப்பகுதியின் அடிப்பாகம் நீர் கோர்த்து மென்மையாக காணப்படும்.வேர்ப்பகுதி மிகவும் குறைந்து அதன் திசுக்கள் பாதிக்கப்பட்டிருக்கும். நோய் முதிர்ந்த நிலையில் கிழங்கில் நோய் தாக்கப்பட்டு அழுகிய திசுக்களாக மாறிவிடும். பயிர் ஆரஞ்சு நிறத்தில் உள்ள கிழங்கு பழுப்பு நிறமாக மாறுவதுடன் கிழங்கு உருவாவதும் பாதிக்கப்படுவதால் விளைச்சல் முழுவதுமாக குறைந்துவிடும். அதை கட்டுப்படுத்த, பயிர் சுழற்சி முறை கடைபிடிக்க வேண்டும். சிறந்த வடிகால் வசதியுள்ள

நிலங்களையே தேர்வு செய்ய வேண்டும். நோய் தாக்குதல் இல்லாத விதை கிழங்குகளையே விதைப்புக்கு பயன்படுத்த வேண்டும். விதை கிழங்கை 0.3 சதவீதம் காப்பர் ஆக்ஸிகுளோரைடு கரைசலில் விதை நேர்த்தி செய்து நிழலில் உலர்த்திய பின் விதைக்க வேண்டும். வயலில் கிழங்கு அழுகல் நோய்க்கான ஆரம்ப அறிகுறிகளை பார்த்துடன் மென்கோ செப் 0.5 சதவீதம் அல்லது காப்பர் ஆக்ஸிகுளோரைடு 0.25 சதம் கரைசலை வேர்ப்பகுதியில் ஊற்ற வேண்டும். நோய் தாக்கிய பயிருக்கு அருகில் உள்ள ஆரோக்கியமான பயிரின் வேர்ப்பகுதியிலும் பூசானக்கொல்லி கரைசலை ஊற்ற வேண்டும். விதைப்புக்கு முன் வேப்பம் புண்ணாக்கு 80 கிலோ என்ற அளவு 4 டன் தொழு உரத்துடன் சேர்த்து வயலில் இடவேண்டும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

**மக்காச் சோளம் விலை சரிவு**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 25,2010,01:51 IST

சிவகிரி: சிவகிரி ஒழுங்கு முறை விற்பனைக்கூடத்தில் மக்காச்சோளம் குவிண்டால் 969 ரூபாய், எள் கிலோவுக்கு 45.99 ரூபாய் விலை கிடைத்தது. சிவகிரி ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தில் வெள்ளிக்கிழமையில் விளைபொருட்கள் ஏலம் நடக்கிறது. நேற்று முன்தினம் நடந்த ஏலத்தில், 202 மூட்டை எள் வந்தது. சிவப்பு எள் கிலோ அதிகபட்சமாக 49.32 ரூபாய், கறுப்பு எள் 29.59 ரூபாய்க்கு விலை போனது. மக்காச்சோளம் 244 மூட்டை வந்தது. குறைந்தபட்ச விலையாக குவிண்டால் 910 ரூபாய், அதிகபட்சமாக 969 ரூபாய் விலையே கிடைத்தது. கடந்த வாரங்களை விட விலை வெகுவாக குறைந்துள்ளதாக விவசாயிகள் வருத்தம் தெரிவித்தனர்.

**கறவை பசு, எருமைகளை இன்சூரன்ஸ் செய்ய அழைப்பு: அரசு மானியம் 50 சதவீதம் கிடைக்கும்**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 25,2010,01:15 IST

பொள்ளாச்சி: பொள்ளாச்சி கோட்ட கால்நடை பராமரிப்பு துறை சார்பில் மத்திய அரசு மானியம் 50 சதவீதத்துடன் கறவை பசு மற்றும் எருமைகளை இன்சூரன்ஸ் செய்ய விவசாயிகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. பொள்ளாச்சி தாலுகாவுக்கு, 2,000 மாடுகள் இன்சூரன்ஸ் செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. தமிழகத்தில், சீதோஷ்ண நிலை மாற்றத்தால் கால்நடைகளுக்கு அடிக்கடி பல்வேறு நோய் தாக்குதல் ஏற்படுகிறது. இதில், கறவை பசுக்கள் மற்றும் எருமைகளுக்கு பாதிப்பு அதிகம் ஏற்படும். நோய் தாக்குதலால் பாதிக்கப்படும் கால்நடைகளால், விவசாயிகளுக்கு இழப்பு அதிகளவில் ஏற்படும் வாய்ப்புள்ளது. இதை தவிர்க்கும் வகையில், மத்திய அரசு

கால்நடைகளுக்கு இன்சூரன்ஸ் செய்யும் திட்டம் அறிமுகப்படுத்தியுள்ளது. கடந்தாண்டு பரிச்சார்த்த முறையில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டது. இதற்காக, பொள்ளாச்சி தாலுகாவுக்கு 200 மாடுகள் இலக்கு நிர்ணயிக்கப்பட்டது.

ஆனால், இத்திட்டத்திற்கு விவசாயிகளிடம் போதிய வரவேற்பு கிடைக்காத நிலை இருந்தது. நடப்பாண்டில், இத்திட்டத்திற்கு மத்திய அரசால் மானியமாக 50 சதவீதம் அறிவிக்கப்பட்டுள்ளது. கறவை பசு மற்றும் எருமை வைத்துள்ள விவசாயிகள் மட்டும் இத்திட்டம் மூலம் பயன் பெறலாம். பொள்ளாச்சி தாலுகாவில், 2010 - 11ம் ஆண்டு இரண்டாயிரம் கால்நடைகளை இன்சூரன்ஸ் செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. ஒரு விவசாயி இரண்டு கறவை பசுக்கள் மற்றும் எருமைகளை இன்சூரன்ஸ் செய்ய முடியும். குறைந்தபட்சம் ஓர் ஆண்டு முதல் மூன்று ஆண்டுகள் வரை இன்சூரன்ஸ் செய்யலாம். இதற்கு, 10 ஆயிரம் ரூபாய் முதல் 40 ஆயிரம் ரூபாய் வரை இன்சூரன்ஸ் தொகை நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இன்சூரன்ஸ் தொகை பிரீமியத்தில் 50 சதவீதம் மட்டும் பயனாளிகள் செலுத்தினால் போதும். மீதமுள்ள 50 சதவீத தொகை மத்திய அரசு மானியமாக வழங்கப்படும்.

நேஷனல் இன்சூரன்ஸ் நிறுவனம் மூலம் இன்சூரன்ஸ் செய்யப்படுகிறது. இதில், நிரந்தர ஊனமுற்ற கால்நடை, ஊனமில்லாத கால்நடை என இரு பிரிவாக பிரிக்கப்பட்டுள்ளது. நிரந்தர ஊனமுற்ற கால்நடைகளுக்கு வழக்கமான பிரீமிய தொகையை விட சற்று அதிகமாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. பொள்ளாச்சி தாலுகாவிலுள்ள விவசாயிகளுக்கு காப்பீடு செய்யும் திட்டம் குறித்து கால்நடை பராமரிப்பு துறை சார்பில் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது.இன்சூரன்ஸ் செய்வது எப்படி? பொள்ளாச்சி கோட்ட கால்நடை பராமரிப்பு துறை உதவி இயக்குனர் நாகராஜ் கூறியதாவது: கால்நடைகளால் ஏற்படும் இழப்புகளை தவிர்க்கும் வகையில் கால்நடை காப்பீடு திட்டம் செயல்படுத்தப்படுகிறது. பொள்ளாச்சி தாலுகாவை சேர்ந்த விவசாயிகள், கால்நடை பராமரிப்பு துறைக்குட்பட்ட 15 கால்நடை மருந்தகங்கள் மூலம் விண்ணப்பிக்கலாம். விவசாயிகளுக்கான விண்ணப்பங்கள் மருந்தகங்களில் கிடைக்கும்.

கறவை பசு மற்றும் எருமை மாடுகளின் உரிமையாளர் முகவரிக்காக அத்தாட்சியாக ரேஷன் கார்டு கொண்டு வர வேண்டும். காப்பீடு செய்யப்படும் பசு மற்றும் எருமை பரிசோதனை செய்து, காப்பீடு வழங்கப்படும். காப்பீடு செய்யும் பசு மற்றும் எருமையின் காதில் அடையாளம் குறிக்கப்படும்.பொள்ளாச்சி தாலுகாவில், இதுவரை 75 விவசாயிகள் 150 கால் நடைகளை இன்சூரன்ஸ் செய்துள்ளனர். இத்திட்டம் குறித்து கிராமப் புறங்களில் விழிப்புணர்வு ஏற்படுத்தப்படுகிறது. கால்நடை மருத்துவ முகாம் நடக்கும் ஊர்களில், இத்திட்டம் குறித்து பொது

மக்களிடம் எடுத்துரைக்கப்படுகிறது. இந்த வாய்ப்பை விவசாயிகள் பயன்படுத்தி பயன்பெறலாம் என்றார்.

**ஏலத்தில் வாழைத்தார் குவிந்தது**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 25,2010,01:57 IST

கோபிசெட்டிபாளையம்: கோபி வேளாண் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கத்தில் 10 ஆயிரம் வாழைத்தார் நேற்றைய ஏலத்தில் குவிந்தது. ஒரே நாளில் ஏழு லட்சத்து 75 ஆயிரம் ரூபாய் மதிப்பில் ஏலம் போனது. கதளி கிலோ 21 ரூபாய், நேந்திரம் 19 ரூபாய், ரோபஸ்டோ தார் 200 ரூபாய், மொந்தன் 225 ரூபாய், ரஸ்தாளி 325, தேன் வாழை 250, பச்சைநாடா 190, செவ்வாழை 310, பூவன் 200 ரூபாய்க்கும் விற்றது. * தேங்காய் 9,000 காய்கள் விற்பனைக்கு வந்தது. அதிகப்பட்சமாக ஒன்பது ரூபாய், குறைந்தப்பட்சமாக நான்கு ரூபாய், சராசரியாக ஆறு ரூபாய்க்கும் விற்றது. 38 ஆயிரம் ரூபாய் மதிப்பில் தேங்காய் வர்த்தகம் நடந்தது.

**நிலம் துளையிடும் கருவி தேவை விவசாயிகள் வலியுறுத்தல்**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 25,2010,00:58 IST

திருப்பூர்: நிலம் துளையிடும் கருவியை மானிய விலையில் அல்லது வாடகைக்கு விடும் திட்டத்தை, வேளாண் பொறியியல் துறை துவக்க வேண்டுமென விவசாயிகள் மத்தியில் கோரிக்கை எழுந்துள்ளது.வேளாண் பொறியியல் துறை மூலம் விவசாயிகளுக்கு, உழுவை இயந்திரம், மண் தள்ளும் இயந்திரம், பாறை துளையிடும் கருவி, நெல் அறுவடை இயந்திரம் வாடகைக்கு அளிக்கப்படுகிறது. வாழை பயிர் செய்ய துளையிடும் கருவி அளித்தல் மற்றும் பொக்லைன் இயந்திரம் வாடகைக்கு வழங்க விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். விவசாயிகள் கூறியதாவது: ஒவ்வொரு ஆண்டும் வாழை நடவு செய்யும்போது, குழி எடுப்பதில் சிக்கல் ஏற்படுகிறது.

ஆட்கள் பற்றாக்குறை நிலவி வரும் நேரத்தில், மண் துளையிடும் கருவியை வழங்குவது விவசாயிகளுக்கு உதவியாக இருக்கும். திருப்பூர், பொங்கலூர், அவிநாசி, பெருமாநல்லூர் சுற்றுப்பகுதிகளில் ஆண்டுதோறும் வாழை பயிரிடப்பட்டு வருகிறது. தென்னை உள்ளிட்ட இதர

மரவகை பயிர்களுக்கும் குழி எடுக்க வேண்டும். வேளாண் பொறியியல் துறை மூலம் துளையிடும் கருவி வாடகைக்கு அல்லது விவசாயிகளுக்கு மானிய விலையில் வழங்க வேண்டும்.

துளையிடும் கருவியை நியாயமான விலையில் வாங்க உதவ வேண்டும். விவசாயிகளின் தோட்டப்பகுதியில் பாசன வசதி ஏற்படுத்துதல், பாதுகாப்பு வேலி அமைத்தல் என பொக்லைன் இயந்திரம் பயன்படுத்துகின்றனர். தனியார் பொக்லைன் இயந்திரங்களை முற்றிலும் சார்ந்திருக்க வேண்டியுள்ளது. மண் தள்ளும் இயந்திரம் போல், பொக்லைன் இயந்திரத்தையும் வாடகைக்கு அளிக்க முன்வர வேண்டும். இவ்வாறு, விவசாயிகள் கூறினர்.

**கதிர் அறுவடை திருவிழா: 27ம் தேதி கொண்டாட்டம்**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 25,2010,00:34 IST

கூடலூர்: கூடலூர் நம்பாலக்கோட்டை அருள்மிகு ஸ்ரீ வேட்டைக்கொருமகன் கோவிலில், வரும் 27ம் தேதி, பாரம்பரிய "புத்தரி' கதிர் அறுவடை திருவிழா நடத்தப்படுகிறது. கூடலூர் பழங்குடி மக்கள், நெல் அறுவடையை துவக்குவதன் முன்னோடியாக, ஐப்பசி மாதம் "புத்தரி' என்ற கதிர் அறுவடை திருவிழவை, பாரம்பரியமாக கொண்டாடுகின்றனர். நடப்பாண்டுக்கான "புத்தரி' கதிர் அறுவடை திருவிழா, வரும் 27ம் தேதி, கூடலூர் நம்பாலக்கோட்டை அருள்மிகு ஸ்ரீ வேட்டைகொருமகன் கோவிலில் நடத்தப்படுகிறது.

காலை 6.00 மணிக்கு மகாகணபதி ஹோமம், 7.00 மணிக்கு, தாயம்பகா மற்றும் கலாச்சார மேள நாட்டியம், அபிஷேகம், சிறப்பு அலங்கார பூஜைகள் நடத்தப்படுகின்றன. காலை 9.00 மணிக்கு அம்மன் அருள்வாக்கு, 9.30க்கு புத்தூர் வயல் பகுதிக்கு சென்று, கதிர் அறுவடை செய்து, ஊர்வலமாக கோவிலுக்கு எடுத்து வருதல், மதியம் 12.00 மணிக்கு, கோவிலில் கதிர் பூஜை, பக்தர்களுக்கு கதிர் பிரசாதம் வழங்குதல் நடத்தப்படுகின்றன. 1.00 மணிக்கு அன்னதானம், 4.00 மணிக்கு, சிவன் மலையில் சிறப்பு பூஜை, மாலை 6.30க்கு மகாதீபாராதனையை தொடர்ந்து, குறிஞ்சி இலக்கிய மன்றத்தின் பஜனை, 7.00 மணிக்கு, அத்தாழப் பூஜை, அப்ப நிவேத்யம், பிரசாதம் வழங்குதல் நடத்தப்படுகின்றன.விழா ஏற்பாடுகளை, இந்து அறநிலையத் துறை மற்றும் விழாக் குழுவினர் மேற்கொண்டுள்ளனர்

**விவசாயத்துக்கு நுண்ணீர் தொழில்நுட்பம் அவசியம்; கூட்டுறவு சங்கப் பதிவாளர்**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 25,2010,02:05 IST

திருச்சி: ""வெற்றிக்கரமாக விவசாயம் செய்ய நுண்ணீர் தொழில்நுட்பம் மிக அவசியம்'' என தமிழக கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் ஸ்வைன் பேசினார்.

இந்திய ரிசர்வ் வங்கி சார்பில், திருச்சி மாவட்டம், மருங்காபுரி அருகே பளுவஞ்சி கிராமத்தில் நடந்த கடனுதவி வழங்கும் விழாவில், கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் ஸ்வைன் பேசியதாவது: சிறு, குறு விவசாயிகள், குத்தகைக்காரர்களுக்கு நிலம் இல்லாததால், கூட்டுறவு வங்கியில் உறுப்பினராக முடிவதில்லை.இவர்கள், மகளிர் சுய உதவிக்குழுக்கள் போல, 10 பேர் கொண்ட குழு ஒன்றை அமைத்து கொண்டால், விவசாயத்துக்கு பயிர் கூட்டுக்கடன் பெறமுடியும். தமிழகத்தில் இதுவரை 36 லட்சம் குழுக்களும், அதில், மூன்று லட்சம் உறுப்பினரும் உள்ளனர்.

அவர்களுக்கு கூட்டுறவு சங்கம் மூலம் 15 லட்சம் ரூபாய் கடன் வழங்கப்பட்டு உள்ளது. தனிப்பட்ட முறையில் கடன் பெற இயலாதவருக்கு பயிர் கூட்டுக்கடன் திட்டம் அரிய வாய்ப்பு. மழையை மட்டும் நம்பி விவசாயம் செய்ய முடியாத நிலை உள்ளது. இதற்கு ஒரே தீர்வாக, நுண்ணீர் பாசனத்திட்டம் அமைந்துள்ளது.

ஒரு ஏக்கருக்கு 50 ஆயிரம் ரூபாய் செலவில் நுண்ணீர் பாசனத் திட்டத்தை செய்யமுடியும். அதில், 60 சதவீதம் வரை அரசு மானியமாக வழங்குகிறது. கூட்டுறவு சங்கம் மூலம் கடன் கொடுக்க ஏற்பாடு செய்யப்படுகிறது. நெல் தவிர அனைத்து பயிரையும் நுண்ணீர் பாசனம் மூலம் செய்யமுடியும்.வெற்றிக்கரமாக விவசாயம் செய்ய நுண்ணீர் தொழில்நுட்பம் மிக அவசியம். இத்திட்டத்துக்காக, தமிழகம் முழுவதும் 100 கோடி ரூபாய் கடனாக கொ டுக்க முடிவெடுக்கப்பட்டுள்ளது. விண்ணப்பிக்கும் அனைவருக்கும் கடன் கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இவ்வாறு அவர் பேசினார்.

**உரமூடைகள் கடத்தல் ; அதிக விலைக்கு விற்பனை**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 24,2010,21:39 IST

திருவாடானை : திருவாடானை தாலுகாவில் உரமூடைகள் கடத்தல் ,அதிக விலைக்கு விற்பனை செய்வதால் விவசாயிகள் பாதிக்கபட்டுள்ளனர்.  மாவட்டத்தின் நெற்களஞ்சியமாக திகழும் திருவாடானை தாலுகாவில் விவசாய காலங்களில் கிடைக்கவேண்டிய உரம், பூச்சிமருந்து மற்றும் விவசாயத்திற்கு வேண்டிய பொருட்கள் உரிய காலங்களில் கிடைக்காததாலும், கிடைக்கும் பொருட்களில் பல்வேறு முறைகேடுகள் நடந்து வருவதாலும், விவசாயிகள் பெரிதும் பாதிக்கபட்டுள்ளனர்.

தடுக்கவேண்டிய அதிகாரிகள் உடந்தையாக இருப்பது வேலியே பயிரை மேயும் கதையாக உள்ளது. தக்க நேரத்தில்பருவமழை துவங்கியதால் பயிர்கள் செழித்து வளர துவங்கியுள்ளது. தற்போது பயிருக்கு தேவையான அடிஉரம் என்ற டி.ஏ.பி. அத்தியாவசிய தேவையாக உள்ளது. இந்த உரமூடைகள் கூட்டுறவு சங்கம் மூலம் வழங்கபடுவதால் அதிகாலையில் இத் தாலுகாவில் உள்ள 33 கூட்டுறவு சங்கங்களிலும் விவசாயிகள் கூட்டம் அதிகமாக இருக்கும். சில நாட்களுக்கு முன்பு டி.ஏ.பி. உரம் தட்டுபாடு ஏற்பட்டுள்ளதாக "தினமலர்' இதழில் செய்திவெளியிட்டிருந்தது. இதன் எதிரொலியாக உடனடியாக உரமூடைகள் சப்ளை செய்யபட்டன.

இதை பயன்படுத்தி சில கூட்டுறவு சங்கங்களில் கடத்தல் மற்றும் கூடுதல் விலைக்கு விற்பது விவசாயிகள் மத்தியில் அதிருப்தியை ஏற்படுத்தி உள்ளது. ஆண்டிவயல் கிராமத்தை சேர்ந்த முன்னாள் கவுன்சிலர் நாகநாதன் கூறியதாவது: திருவாடானை தாலுகாவில் ஏழை விவசாயிகள் ஏராளமானோர் உள்ளனர். விவசாய காலங்களில் தோடு, மூக்குத்தியை அடகு வைத்து உரம் வாங்கும் குடும்பத்தினர் நிறைய பேர் உள்ளனர். இப்படிபட்ட நிலையில் உரத்தை கடத்துவது, கூடுதல் விலைக்கு விற்பது போன்ற செயல்கள் நடைபெறுவது வேதனையாக உள்ளது. டி.ஏ.பி.உரம் 517.40 க்கு விற்கவேண்டும். ஆனால் .540 முதல் 550 வரை விற்கபடுகிறது. உயர்அதிகாரிகளிடத்தில் புகார் செய்தாலும் நடவடிக்கை எடுப்பதில்லை. அரசு தான் நடவடிக்கை எடுக்கவேண்டும் , என்றார்.

**கோழி வளர்ப்பு பயிற்சி முகாம்**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 25,2010,02:21 IST

கரூர்: கரூர் அருகே பண்டுதகாரன்புதூர் கால்நடை பல்கலை பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மைய வளாகத்தில் அக்டோபர் 25ம் தேதி ஒரு நாள் வணிக ரீதியான நாட்டுக்கோழி வளர்ப்பு பயிற்சி முகாம் நடக்கிறது. பயிற்சியில், நாட்டுக்கோழி வளர்ப்பு, பண்ணை வீட்டமைப்பு, தீவன மேலாண்மை, நோய் மற்றும் அவற்றை தடுக்கும் முறைகள், விற்பனை உத்திகள், பண்ணைப் பொருளாதாரம் குறித்த தலைப்புகளில் பயிற்சி அளிக்கப்பட்டு அத்துடன் களப்பயிற்சியும் வழங்கப்படுகிறது."பயிற்சியில் பங்கேற்போர் காலை 10 மணிக்குள் பயிற்சி மையத்தில் இருக்கவும், விபரங்களுக்கு 294355 என்ற டெலிஃபோன் எண்ணில் தொடர்பு கொள்ளவும்' மைய இணைப்பேராசிரியர் செந்தில்வேல் அறிவித்துள்ளார்.

**விவசாய செயல்முறை விளக்கம்**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 24,2010,21:34 IST

முதுகுளத்தூர்: மதுரை விவசாய கல்லூரி மாணவிகளின் கிராமபுற விவசாய அனுபவ திட்டத்திற்காக முதுகுளத்தூர் பகுதியில் கடந்த 22 நாள்களாக கடம்பன்குளம், மாரந்தை, கீழக்கன்னிசேரி உட்பட பல கிராமங்களில் முகாம்களை நடத்தினர்.முகாமின் இறுதி நிகழ்ச்சியாக விவசயத்திற்கு பயன்படும் நடப்பு நீர்தெளிப்பானின் செயல்பாடுகள் குறித்த செயல்முறை விளக்கத்தை நீர்வள தலைவர் பேராசிரியர் கணபதி, மாணவிகள் செய்து காண்பித்தனர். மேலும், செம்மை நெல் சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு களை எடுக்கும் இயந்திரம், அதன் செயல்பாடுகள் குறித்தும் விளக்கினர். ஓரிவயல் கிராம தலைவர் சுப்பிரமணியம்,கல்லூரி மாணவிகளின் குழுத்தலைவி காவ்யா உட்பட அனைத்து மாணவிகளும் கலந்து கொண்டனர்.

**நெல் நாற்றங்காலில் இலைப்பேன் தாக்குதலை கட்டுப்படுத்தும் முறைகள்**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 24,2010,02:04 IST

திருநெல்வேலி : நெல் நாற்றங்காலில் இலைப்பேன் தாக்குதலை கட்டுப்படுத்தும் முறைகள் குறித்து மானூர் வேளாண்மை உதவி இயக்குநர் முருகேஸ் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் அறிக்கையில் கூறியிருப்பதாவது: தற்போது வறண்ட வானிலை தொடர்ந்து நீடித்து வருவதால் பிசானப் பருவ நாற்றங்காலில் இலைப்பேன் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது. இந்த இலைப்பேன் தாக்குலை மிக எளிய முறையில் கண்டறியலாம். பாதிக்கப்பட்ட நாற்றங்காலில் நாற்றுக்கள் செம்பழுப்பாக மாறியிருக்கும். நாற்றுக்களின் நுனி கருகியிருக்கும். நாற்றினை ஈரக்கையினால் மென்மையாக தடவி பார்த்தால் கையில் செம்பழுப்பு நிற இலைப்பேன் ஒட்டியிருக்கும். இதனை கட்டுப்படுத்த நாற்றங்காலில் நாற்றின் உயரத்திற்கு தண்ணீர் கட்டி பின்பு வடிக்கவும். ஒரு லிட்டர் தண்ணீருக்கு 2.5 மிலி மானோகுரட்டபாஸ் அல்லது 2 மிலி எண்டோசல்பான் என்ற வீதத்தில் கலந்து கைத்தெளிப்பான் மூலம் நாற்றுக்கள் நன்கு நனையுமாறு தெளிக்க வேண்டும் என அவர் தெரிவித்துள்ளார்.

**மானிய விலையில் விதைநெல் வினியோகம்**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 24,2010,02:04 IST

திருநெல்வேலி : மானூர் பகுதியில் மானிய விலையில் விதைநெல் வினியோகம் செய்யப்படுகிறது.

இதுகுறித்து மானூர் வேளாண்மை உதவி இயக்குநர் முருகேஸ் தெரிவித்திருப்பதாவது: நடப்பு பிசானப் பருவம் மற்றும் பிந்திய பிசானப் பருவ நெல் சாகுபடியாளர்களுக்கு மானூர், கங்கைகொண்டான், நெல்லை டவுன் ஆகிய மூன்று வேளாண்மை விரிவாக்க மையங்களில் ஆடுதுறை 45 ரக விதைநெல் கிலோவிற்கு ரூ.5 வீதம் மானிய விலையில் வழங்கப்பட்டு வருகிறது. ஆடுதுறை 45 ரகம் 110 நாள் வயதுடையது. அம்பை 18யை விட கூடுதல் மகசூல் தரக்கூடியது. ஆணைக்கொம்பன் ஈக்கு எதிர்ப்பு திறன் கொண்டது. மத்திய சன்ன ரகத்தை சேர்ந்தது. எக்டேருக்கு 6.14 மெ.டன் மகசூல் தரவல்லது. அதிக தூர்கட்டும் திறன் கொண்டது. எனவே விதைநெல் தேவைப்படும் விவசாயிகள் தங்களின் நில உடைமை ஆவனத்துடன் அருகில் உள்ள வேளாண்மை விரிவாக்க மையத்தை தொடர்பு கொள்ளுமாறு அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

**மானாவாரி பருத்தி சாகுபடியாளர்கள் கடைபிடிக்க வேண்டிய வழிமுறைகள்**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 24,2010,01:18 IST

செய்துங்கநல்லூர்: மானாவாரி பருத்தி சாகுபடியாளர்கள் விதைக்கும் போது கடைப்பிடிக்க வேண்டிய சில தொழில்நுட்பங்கள் குறித்து வேளாண் விஞ்ஞானி யோசனை தெரிவித்துள்ளனர். பருத்தியில் வேரழுகல் நோய், வாடல் நோய், இலைக் கருகல் நோய் என பல்வேறு நோய்கள் விதை மூலம் தாக்குகின்றன. பூசண வித்துக்கள் விதையின் மேல் மற்றும் உட்புறம் தங்கியிருக்கின்றன. விதை முளைக்கும்போது பூசண வித்துகளும் முளைத்து நோயினை உண்டாக்கி சேதம் விளைவிக்கின்றன. விதை மூலம் பரவும் நோய்களைத் தடுக்க விதை நேர்த்தி செய்வது அவசியம். பருத்தி விதைக்கும் முன்னர் விதை நேர்த்தி செய்தல் அவசியம். ஒரு கிலோ விதைக்கு பத்து கிராம் வீதம் சூடோமோனாஸ் புளுரசன்ஸ் என்ற உயிரியல் காரணி கொண்டு விதைப்பதற்கு சற்று முன்னர் விதை நேர்த்தி செய்ய வேண்டும்.

சம வயதுள்ள ரகத்தை யாவரும் தேர்ந்தெடுத்து ஏக காலத்தில் (ஒரு வாரத்திற்குள்) விதைத்திட வேண்டும். வயலைச் சுற்றிலும் உள்ள பூச்சிகளுக்கு மாற்றுணவாகப் பயன்படும் செடிகள்,

களைகளை அகற்றிச் சுத்தமாக வைக்க வேண்டும். தொழுஉரம் மற்றும் வேப்பம் பிண்ணாக்கு இடுவது பூச்சி மற்றும் நோய்த்தாக்குதலைக் குறைத்தும், (வேரழுகல், வாடல், நூற்புழு, தண்டுக்கூன் வண்டு, தரைக்கூன் வண்டு, வேர்ப்புழு). நன்மை தரும் பூச்சியான பொறிவண்டுகளின் பெருக்கத்திற்கு ஊடுபயிராக தட்டைப்பயிறு பயிரிட வேண்டும். ஓரப்பயிராக ஆமணக்கு பயிரிட வேண்டும். அதன் மூலம் புரடீனியாப் புழுக்களின் தாக்குதலைக் கட்டுப்படுத்த முடியும்.

புரடீனியாப் புழுக்களின் தாய் விந்துகளைக் கவர்ந்து முட்டையிட வைக்கும். முட்டைகளும், இளம் புழுக்களும் உள்ள ஆமணக்கு இலைகளை பறித்து அழிக்க வேண்டும். கிரைசோப்பா, குளவிகள் போன்ற நன்மை தரும் பூச்சிகள் பெருக்கத்திற்காக ஊடுபயிராக 20 சால் பருத்திக்கு ஒரு சால் மக்காச்சோளம் பயிரிட வேண்டும். மேற்கூரிய தொழில் நுட்பங்களை மானாவாரி பருத்தி விதைக்கும் போது உழவர்கள் கடைப்பிடிக்குமாறு திருவில்லிபுத்தூர் பருத்தி ஆராய்ச்சி நிலையத்தின் பேராசிரியர் மற்றும் தலைவர் முருகேசன் கேட்டுக் கொள்கிறார்.

**செம்மை நெல் சாகுபடியில் அதிக மகசூல் பெறுவது எப்படி: வேளாண் விஞ்ஞானி விளக்கம்**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 24,2010,01:20 IST

செய்துங்கநல்லூர்: நடவு அடையாளக் கருவியை பயன்படுத்தி செம்மை நெல் சாகுபடி செய்வது குறித்து வேளாண் விஞ்ஞானி விளக்கம் அளித்துள்ளார். நடப்பு பிசான பருவத்தில் நெல் சாகுபடியில் செலவுகளை குறைத்து அதிக மகசூல் பெற தற்போதுள்ள நடைமுறையை விட செம்மை நெல் சாகுபடி முறையினை கையாளுவது அவசியம். ஏக்கருக்கு 3 கிலோ விதை நெல் தேவைப்படும். ஒரு ஏக்கர் நடவுக்கு ஒரு சென்ட் (40 சதுர மீட்டர்) நாற்று மேடை தேவை. அருகிலிருக்கும் மண்ணை எடுத்து நடவு வயலின் ஓரத்தில் ஒரு மீட்டர் அகலம் ஐந்து மீட்டர் நீளம் அளவுள்ள 8 மேடைகளை உருவாக்க வேண்டும். மேடையை நன்கு சமப்படுத்தி 1ஙீ5 மீ அளவுள்ள பாலிதீன் சீட்டை விரித்து விட வேண்டும். தொழி மண்ணை 2 செ.மீ உயரத்திற்கு சமமாக இட வேண்டும்.

பின் விதைநேர்த்தி செய்ய ஒரு கிலோ விதைக்கு சூடோமோனாஸ் 10 கிராம் மற்றும் அசோபாஸ் உயிர் உரம் மூன்று கிலோ விதைக்கு ஒரு பாக்கெட் (200 கி) என்ற அளவிலும் பயன்படுத்த வேண்டும். சூடோமோனாஸ் மற்றும் அசோபாஸ் ஆகியவற்றை தேவையான அளவு அரிசிக் கஞ்சி அல்லது தண்ணீரில் கரைத்த பின் அவற்றை விதைகளுடன் நன்றாக கலந்து நிழலில் உலர்த்த வேண்டும். நிழலில் உலர்த்திய விதைகளை தண்ணீரில் 24 மணி நேரம் ஊறவைத்து வடிகட்டி பின் (24 மணி நேரம்) முளைகட்ட வேண்டும். ஒவ்வொரு 5 ச.மீ மேடையிலும் 375

கிராம் (முளை கட்டும் முன் எடை) விதையை முளைக்கட்டியபின் (இரண்டாம் கொம்பு) பரவலாக விதைக்க வேண்டும். விதைத்த பின் தென்னை ஓலைகள் கொண்டு மேடைகளை மூடிவிட்டு மூன்றாம் நாள் எடுத்து விடலாம். விதைத்த ஒரு வாரத்திற்கு பின் நாற்று வளர்ச்சி குறைவாக இருந்தால் 0.5 சத யூரியா கரைசலை (0.5 சத கரைசல் தயாரிக்க 50 கிராம் யூரியாவை 10 லிட்டர் நீரில் கரைக்க வேண்டும்) பூவாளி கொண்டு தெளிக்க வேண்டும்.

செம்மை நெல் சாகுபடியில் நடவு வயலை சமன்படுத்துவது சரியாகச் செய்யப்படவேண்டிய ஒன்றாகும். பள்ளமாக இருக்கும் இடங்களில் நடப்படும் இளநாற்றுகள் அழுகிவிட வாய்ப்புள்ளது. மேடுபள்ளமில்லாமல் பரம்படித்து சமன்படுத்த வேண்டும். நீர் வடியுமாறு சிறு வாய்க்கால்களை உருவாக்க வேண்டும். தேவையான 33 கிலோ டி.ஏ.பி.உரத்தையும், 7 கிலோ பொட்டாஷ் உரத்தையும் அடியுரமாக நடவு வயலில் இட வேண்டும். ஒரு குத்துக்கு 1 நாற்று வீதம் 14-15 நாட்கள் வயதுடைய நாற்றினை நடவு செய்ய வேண்டும். முடிந்த அளவுக்கு வேர்கள் மேல் நோக்காமலும் ஆழமாக இல்லாமலும் நடுவது நல்லது.

நாற்றுக்களை 25ஙீ25 செ.மீ இடைவெளியில் சதுர நடவு செய்யவும். சதுர நடவு செய்வதற்கு அடையாளமிடப்பட்ட கயிறு அல்லது நடவு அடையாளக் கருவியையும் பயன்படுத்தலாம். நன்கு சமப்படுத்திய நடவு வயலை இரண்டு நாட்கள் இஞ்ச விட்டு பின்பு தண்ணீரை சுத்தமாக வடிக்க வேண்டும். அதன் பின் மார்க்கர் அல்லது நடவு அடையாளக் கருவியை கொண்டு உருட்டியபின் சதுர நடவை மேற்கொள்ள வேண்டும். இவ்வாறு செய்வதால் 25ஙீ25 செ.மீ க்கு சதுர நடவு பின்பற்றப்பட்டு பயிருக்கு தேவையான காற்றோட்டம், சூரிய வெளிச்சம் கிடைத்து பயிர் நன்கு வளர்ச்சி அடைந்து அதிக தூர்கள் பெற முடிகிறது.

மேலும் சுழலும் களைக்கருவியை கொண்டு முறையே நடவு செய்த 10, 20, 30 மற்றும் 40 ம் நாட்களில் நெற்பயிர்களுக்கு இடையில் குறுக்கும் நெடுக்குமாக உருட்ட வேண்டும். இவ்வாறு செம்மை நெல் சாகுபடியை முறையாக பின்பற்றி பயன் பெறுமாறு திருவில்லிபுத்தூர், பருத்தி ஆராய்ச்சி நிலையத்தின் பேராசிரியர் மற்றும் தலைவர் முருகேசன் தெரிவித்துள்ளார்.

**அதிக விலைக்கு உரம் விற்றால் லைசென்ஸ் ரத்து : அரியலூர் கலெக்டர் எச்சரிக்கை**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 24,2010,01:49 IST

அரியலூர்: "நிர்ணயிக்கப்பட்ட விலையை விட அதிகமான விலைக்கு உரம் விற்றால், சம்பந்தப்பட்ட உர விற்பனை நிலையங்களின் லைசென்ஸ் ரத்து செய்யப்படும்' என, அரியலூரில் நடந்த விவசாயிகள் குறைதீர்நாள் கூட்டத்தில், மாவட்ட கலெக்டர் பொன்னுசாமி எச்சரிக்கை

விடுத்துள்ளார்.அரியலூர் தாலுகா அலுவலக கூட்ட அரங்கத்தில், மாவட்ட கலெக்டர் பொன்னுசாமி தலைமையில் நடந்த விவசாயிகள் குறைதீர்நாள் கூட்டத்தில், வேளாண் துறை இணை இயக்குநர் ரெகுநாதன் வரவேற்றார். விவசாய பணிகளின் பிரச்சனைகள் குறித்து, வேளாண் சங்க பிரதிநிதிகள் ராஜா சிதம்பரம், பிச்சைபிள்ளை, ஆண்டிமடம் ஜெயச்சந்திரன், அம்பேத்கர்வழியன், செங்கமுத்து உள்ளிட்டோரும் கோரிக்கைகளுக்கு பதிலளித்து, சம்பந்தப்பட்டதுறை அலுவலர்களும் பேசினர்.

அரியலூர் மாவட்ட கலெக்டர் பொன்னுசாமி பேசியதாவது: போலி ரேஷன் கார்டுகள் என தகுதி நீக்கம் செய்யப்பட்ட ரேஷன் கார்டுகளில், தகுதியுள்ள அனைத்து ரேஷன் கார்டு தாரர்களும் சம்பந்தப்பட்ட அலுவலரிடம் விண்ணப்பித்தால், விசாரணைக்கு பிறகு மீண்டும் ரேஷன் பொருட்கள் வாங்க அனுமதி வழங்கப்படும். கேஸ் சிலிண்டர் இணைப்பு வழங்குவதில் குளறுபடி நிலவுவதாக இங்கே கூறப்பட்டது. 18 வயது நிரம்பிய ஆண், பெண் உள்ளிட்ட யாராக இருந்தாலும், அவர்களுக்கு கேஸ் கனெக்ஷன் வழங்கப்பட வேண்டும்.பயிர் இன்ஷூரன்ஸ் வழங்குவது சம்பந்தமாக சரியான தகவல் கிடைக்கவில்லை. இதுபற்றி சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளை கொண்ட ஆய்வு கூட்டம் நடத்திய பிறகு விவசாயிகளுக்கு தகவல் தெரிவிக்கப்படும்.

உரம் கூடுதல் விலைக்கு விற்பனை செய்யப்படுவதாக இங்கே கூறப்பட்டது. வேளாண்துறையினரின் அனுமதிக்கு பிறகு தான், தனியார் உர விற்பனை நிலையங்களுக்கு அனுமதி வழங்கப்படுகிறது. உர விற்பனை குறித்து அதிகாரிகள் மூலம் ஆய்வு மேற்கொள்ளப்படும். உரம் நிர்ணயிக்கப்பட்ட விலையை விட அதிகமாக விற்பனை செய்வது தெரியவந்தால், சம்பந்தப்பட்ட விற்பனை நிலையங்களின் லைசென்ஸ் ரத்து செய்யப்படும்.விவசாய வேலை இல்லாத நாட்களில் கிராம மக்களுக்கு வேலை வாய்ப்பை ஏற்படுத்த வேண்டும் என்கிற நோக்கத்துடன் உருவாக்கப்பட்டது தான், 100 நாள் வேலை எனப்படும் மகாத்மா காந்தி தேசிய வேலை உறுதியளிப்பு திட்டமாகும்.

எனவே, விவசாய பணிகள் நடக்கும் இன்றைய கால கட்டத்தில், மேற்கண்ட தேசிய ஊரக வேலை உறுதியளிப்பு திட்ட பணிகளை நடத்த கூடாது என, அரியலூர் மாவட்டத்தில் உள்ள அனைத்து வட்டார வளர்ச்சி அலுவலர்களுக்கும் உத்தரவிடுகிறேன். இதை அவர்கள் முழுமையாக பின்பற்றி செயல்பட வேண்டும். இவ்வாறு கலெக்டர் பேசினார்.அரியலூரில் நடந்த விவசாயிகள் குறைதீர்நாள் கூட்டத்தில், டி.ஆர்.ஓ., பிச்சை, ஆர்.டி.ஓ., க்கள் ஜீவரத்தினம், நிர்மலா, மாவட்ட கலெக்டரின் நேர்முக உதவியாளர் ராஜராஜன், தோட்டகலைதுறை உதவி இயக்குநர்

சௌந்தர்ராஜன், வேளாண் உதவி இயக்குநர் சந்தான கிருஷ்ணன் உள்ளிட்ட அதிகாரிகள், விவசாய பிரதிநிதிகள் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

**விவசாயிகள் லாபத்தில் சேமிப்பு கிடங்கு நிறுவனத்தின் பங்கு குறித்த கருத்தரங்கு**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 24,2010,21:28 IST

பெரியகுளம் : விவசாயிகள் லாபம் அடைவதற்கு மத்திய சேமிப்புக்கிடங்கு நிறுவனம் முக்கிய பங்கு வகுக்கிறது என பெரியகுளம் தோட்டக்கலைகல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில், மத்திய சேமிப்பு கிடங்கு நிறுவனம் சார்பில் விழிப்புணர்வு கருத்தரங்கு நடந்தது. கல்லூரி முதல்வர் பொன்னுச்சாமி தலைமை வகித்தார். சேமிப்பு ஆய்வு அதிகாரிகள் தேவதாஸ், கருணாகரன், உமர்ஷெரீப் ஆகியோர் முன்னிலை வகித்தனர். விவசாயிகள் கலந்துகொண்டனர்.

இந்தியாவில் மத்திய சேமிப்பு கிடங்கு நிறுவனம் 497 இடங்களில் உள்ளது. இவற்றில் தமிழகத்தில் மதுரை, விருதுநகர், தஞ்சாவூர், திருச்சி, தூத்துக்குடி உட்பட 26 இடங்களில் உள்ளன. தேனி மாவட்டத்தில் உத்தமபாளையம், கம்பம், சின்னமனூர் பகுதிகளில் இரண்டுபோகம் முதல் மூன்று போகம் வரை நெல் விளையும். அறுவடை காலங்களில் விளையும் பொருட்களுக்கு எதிர்பார்த்த விலை கிடைக்காது.

நெல், துவரை, உளுந்து உட்பட தானிய பயிர்களை சேமிப்பு கிடங்குகளில் இருப்பு வைக்கலாம். விவசாயிகள் வங்கிகளில் 75 சதவீதம் கடனுதவி பெறலாம். சேமிப்பு கிடங்குகளில் ஒரு நாளைக்கு நூறு கிலோ எடையுள்ள மூடைக்கு ஆறுரூபாய் இருபத்து ஐந்து காசு வாடகையாவும், ஐம்பது கிலோவிற்கு மூன்று ரூபாய் எண்பது காசு வாடகையாகவும் நிர்ணயித்துள்ளோம். வாடகையில் விவசாயிகளுக்கு முப்பது சதவீதம் தள்ளுபடி கொடுக்கின்றோம். விவசாயிகள் லாபம் அடைவதற்கு மத்திய சேமிப்பு கிடங்கு முக்கிய பங்கு வகுக்கிறது என கருத்தரங்கில் தெரிவிக்கப்பட்டது.

**ராஜராஜன் 1000 நெல் சாகுபடி**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 24,2010,23:57 IST

திண்டிவனம் : திண்டிவனம் அடுத்த ஓமிப்பேர் கிராமத்தில் ஆதி பராசக்தி வேளாண்மை கல்லூரி மாணவிகள் ராஜராஜன் ஆயிரம் நெல் சாகுபடி முறையில் நெல் நடவு செய்தனர். மணிபாலன்

என்பவரின் வயலில் மாணவிகள் நர்மதா, ரம்யா ராணி, சங்கீதா, ஸ்ரேயா, வினிதா, யோக லட்சுமி ஆகியோர் நெல் நடவு பயிற்சி பெற்றனர். மரக்காணம் வேளாண் உதவி இயக்குனர் ராஜேந் திரன், வேளாண்மை அலுவலர் ஆரோக்கியராஜ் மாணவிகளுக்கு உதவினர். உதவி வேளாண்மை அலுவலர்கள் சுந்தரலிங் கம், சந்தோஷ்குமார் உட் பட பலர் உடனிருந்தனர்.

**எண்ணெய் பனை சாகுபடி மூலம் அதிக லாபம்VVVV**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 24,2010,23:47 IST

சங்கராபுரம் : பாமாயில் சாகுபடி வயலை வேளாண்மை அதிகாரி ஆய்வு செய்தார். சங்கராபுரம் அடுத்த எஸ்.குளத்தூர் கிராமத்தில் பயிரிடப்பட்டுள்ள எண்ணெய் பனை சாகுபடி வயலை வேளாண் இணை இயக்குனர் ராமகிருஷ்ணன் ஆய்வு செய்தார்.

பின்னர் செய்தியாளர்களிடம் அவர் கூறியதாவது: எண்ணெய் பனை சாகுபடியை மேம்படுத்தும் வகையில் வேளாண்துறை சார்பில் இரண்டரை ஏக்கருக்கு 7500 ரூபாய் மதிப்பிலான எண்ணெய் பனை கன்றுகள் இலவசமாக வழங்குகிறது. பராமரிப்பு செலவுகளுக்காக 4 ஆண்டுகளில் 15 ஆயிரம் ரூபாய் வழங்கப்படுகிறது. முதல் 3 ஆண்டுகளுக்கு கடலை, உளுந்து, மக்காசோளம், மரவள்ளி, வாழை, மஞ்சள், சூரியகாந்தி ஆகிய பயிர்களை ஊடுபயிர் செய்து பயன் பெறலாம். மூன்று ஆண்டுகளுக்கு மேல் 30 ஆண்டுகள் வரையில் ஒவ்வொரு மாதமும் அறுவடை செய் வதால் வருமானம் கிடைக் கும்.

மற்ற பயிர்களுடன் ஒப்பிடுகையில் சாகுபடி செலவு மற்றும் வேலை ஆட்கள் மிக குறைவு. வட்டார வேளாண் விரிவாக்க மையங்களில் தொழில்நுட்ப பயிற்சிகளும், ஆலோசனைகளும் வழங்கப்படுகிறது. பழக்குலைகளை காவிரி பாமாயில் நிறுவனம் ஒப்பந்த முறையில் அரசு நிர்ணயிக்கும் விலையில் எடுத்துக் கொள்கின்றனர். இவ்வாறு வேளாண் இணை இயக்குனர் ராமகிருஷ்ணன் கூறினார். ஆய்வின்போது உதவி வேளாண் இயக்குனர்கள் சங்கர், ஆனந்தன் மற்றும் காவிரி பாமாயில் நிறுவன வளர்ச்சி ஆய்வாளர் சதீஷ் மன்னன் உடனிருந்தனர்

தினபூமி

# விவசாயிகள் விவசாய மின் இணைப்புக்கு உதவி மின் பொறியாளரை சந்திக்க கலெக்டர் உத்தரவு

சிவகங்கை,அக்டோபர் 24,

**தமிழ்நாடு மின்சாரவாரியம் 31.3.2011க்குள் 2 லட்சம் விவசாய மின் இணைப்புகள் வழங்க உத்தேசித்துள்ளது.**

**இதன்படி முதல் கட்டமாக 31.3.1995 வரை பதிவு செய்த விவசாய விண்ணப்பத்தில் கம்பம் இல்லாமல் அல்லது ஒரு கம்பம் மட்டும் நட்டு மின் இணைப்பு கொடுக்க உத்தேசித்துள்ளதால்.**

**தகுதி உள்ள விவசாய விண்ணப்பதாரர்கள் உடனடியாக அந்தந்த உதவி மின் பொறியாளரை சந்தித்து தகவல் கொடுக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள் என மேற்பார்வை பொறியாளர் வே.பாண்டியராஜன் அறிவித்துள்ளார் என்று மாவட்ட கலெக்டர் வா.சம்பத் தெரிவித்துள்ளார்.**